பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 16 புதன்கிழமை 29.04.2020 கதிர் 43

## 622 பேருக்கு கொரோனா

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பேர் இன்று புதன் கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 622 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

2

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்தார் ஜனாதிபதி கோட்டா

கொழும்பு,ஏப். 29

கொரோனா வைரஸை இல்லா தொழிக்கும் போராட்டத்தில் சகல எதிர்க்கட்சிகளும் எம்முடன் இணைந்து பணியாற்றலாம். அதை நாம் மனதார வரவேற்போம். அதற்காகக் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு கோருவதில் எந்த நியாயமும் கிடையாது. எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடுவதற்காகவே பழைய நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு வலியுறுத்துகின்றனர். தேர்தல் தோல்விப் பயத்திலேயே அவர்கள் இருக்கின்றனர்.

2

## நாவலப்பிட்டி நகரில் கடைகளுக்குப் பூட்டு

கொழும்பு, ஏப். 29

நாவலப்பிட்டி நகரத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை

2

# அராலியில் இராணுவத்தை தனிமைப்படுத்த எதிர்ப்பு!

## மக்கள் திரண்டமையால் பதற்றம்





அராலித்துறை இராணுவ முகாமில் படையினரைத் தனிமைப்படுத்தல் நிலையம் அமைப்பதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முதல் அராலித்துறை இராணுவ முகாமில் கடமையாற்றுபவர்களைத் தவிர வேறு வெளியாள்கள் பலர் தொடர்ச்சியாக அங்கு அழைத்துவரப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து முகாமை அண்டிய கிராம மக்கள் இன்று காலை எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

2

## தேர்தல் குறித்து ஆணைக்குழு கூடி முடிவெடுக்க வேண்டுமாம்

### அதன் தலைவர் கூறுகின்றார்

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கூடி தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவது குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று காலை தொலைப்பேசியூடாக இடம்பெற்ற ஊடக நிகழ்வு ஒன்றில் கலந்துக்கொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொதுத் தேர்தலை திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்க முடியாது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தை உடனே கூட்டுங்கள்!

### ஜனாதிபதிக்கு மங்கள கடிதம்

கொழும்பு, ஏப். 29

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுங்கள். அரசமைப்பை மீறினால் பெரும் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்து ஜனாதிபதிக்குக் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர.

நாடாளுமன்றத்தை உடன் கூட்டத்தவறினால் அது

2



## கண்காணிப்பில் தொலைக்காட்சி

கொழும்பு, ஏப். 29

கடற்படையினர் மத்தியில், கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்துவரும் நிலையில் பிரபல தொலைக்காட்சி ஒன்றில் பணியாற்றுவோருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விமானப்படை இசைக் குழுவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதியாகியதைத் தொடர்ந்து அந்தக் குழுவின் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2

## வடிகாலமைப்புச் சபையின் அலுவலகமும் மூடப்பட்டது!

வவுனியா,ஏப்.29

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வெலிசறை கடற்படைமுகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனோ தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தக்

2

## கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்க ஐ.தே.க. கோரிக்கை!

கொரோனா வைரஸ் தொற்று இருப்பதை கண்டறியும் பி.சி.ஆர். நாளாந்த பரிசோதனை களை அதிகரிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அவசர கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளது.

தினசரி குறைந்த பட்சம் மூவாயிரம் பரிசோதனைகளையாவது நடத்த வேண்டுமென அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

# மட்டு. வைத்தியசாலையில் பரிசோதனை; இதுவரை 4 பேரில் தொற்றுக் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்று நோய் பரிசோதனையான பி.சி. ஆர் பரிசோனை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 143 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 4 பேருக்கு நோய் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி காலாறஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

மட்டு. பேதனா வைத்தியசாலையில் இன்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். கொரோனா வைரஸ் உலகலாவிய தொற்று நோய் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் சுகாதார அமைச்சு முன் ஆயத்தங்கள் செய்துள்ளது.

இதற்கமைய கொரோனா முகாமைத்துவம் செய்யும் வைத்தியசாலையாக எமது வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டது. இதற்கமைய வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் இரண்டாவது மாடியில் கொரோனா தொற்று நோய் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதே கட்டடத்தில் முதலாவது தளத்தில் விசேட வைத்திய பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டட முதலாவது மாடியிலுள்ள விசேட பிரிவுக்கு வரும் நோயாளர்களில் கொரோனா தொற்று எனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்கள் பிரத்தியோக பாதையூடாக அழைத்து செல்லப்பட்டு இரண்டாவது மாடியிலுள்ள கொரோனா பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர், பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு அல்லது வெலிசறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவார்.

அதேவேளை நோய் தொற்று அற்றவர்கள் சிகிச்சையளிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப் படுத்தப்படுவார்கள் அதன் பின்னர் அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவருகின்றனர். தற்போது கொரோனா தொற்று நோய் பரிசோதனையான பி.சி.ஆர். உபகரணம் நிர்மாணிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை முதல் இதன் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை 143 பரிசோதனைகள் மேற்கொண்டுள்ளோம். இதனிடையே திங்கட்கிழமை மேற்கொண்ட பரிசோதனையில் 4 போருக்கு நோய் தொற்று உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் எமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஒருவர். ஏனைய மூவரும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள்.

அவர்கள் ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் .இதேவேளை இதுவரைக்கும் எமது வைத்தியசாலையில் கொரோனா தொற்று நோய் சந்தேகத்தில் 101 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். அதில் 8 பேருக்கு நோய் தொற்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் ஒருவர் சமூகத்தில் இருந்து வந்தவர். அவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார் அதேவேளை ஏனையவர்கள் தனிமைப்படுத்தும் தடுப்பு முகாமில் இருந்து வந்தவர்கள். அவர்களும் உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என அவர் தெரிவித்தார்.

## அராலியில் இராணுவத்தை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது இராணுவ முகாமில் கொரோனா நோய் சந்தேக நபர்களை தனிமைப்படுத்தினால் அது தமக்கு ஆபத்தானதாக அமையும் எனவும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் அருகில் உள்ள தாம் மீன் பிடித்தொழிலைமேற்கொள்ளும்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் என்றும், மீன்பிடித்தொழில் மேற்கொள்வது சிக்கலானதாக மாறும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனால்தமக்கும்இராணுவத்துக்கும் பாதிப்பில்லாத பொருத்தமான இடத்தில் இத்தகைய தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்குமாறும், மக்கள் செறிவாக வாழ்கின்ற இந்தப் பகுதியில் இராணுவ முகாமில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் அந்த மக்கள் வலியுறுத்தினர்.

மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளியிட்டதால் அங்கு பதற்றமான நிலைமை காணப்பட்டது.

## 143 இலங்கை மாணவர்கள் டில்லியில் இருந்து வந்தனர்

கொரோனா தொற்றுக் காரணாக இந்தியாவின் புதுடில்லியில் சிக்கித் தவித்த 143 இலங்கை மாணவர்களை கொண்ட குழுவினர் இன்று மாலை நாடு திரும்பியுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் - 1196 என்ற விசேட மூலமாகவே புதுடில்லியிலிருந்து பிற்பகல் 1.40 மணியளவில் இலங்கை நோக்கிப் புறப்பட்ட இவர்கள், மாலை 4.35 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேசவிமானநிலையத்தைவந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பேரில் கொரோனா தொற்று தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை946இலங்கைமாணவர்கள் நான்கு நாடுகளிலிருந்து சிறப்பு விமானங்கள் மூலமாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்குப் பெரும் பாதகமான நிலைமையை உண்டுபண்ணும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டித் தீர்மானங்களை எடுப்பதே நாட்டுக்கு நல்லது. இல்லையேல் அரசமைப்பை மீறிய குற்றத்துக்காக பலரின் பிரஜாவுரிமை ஐந்து வருடங்களுக்கு இரத்துச் செய்யப்பட்டு அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் ஏற்பாடுகள் அரசமைப்பில் உள்ளன. எனவே நாட்டின் நன்மை கருதி நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கேட்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடிகாலமைப்புச் சபையின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை வீரரின் உறவினர் ஒருவர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா அலுவலகத்தில் கடமையாற்றி வருகிறார்.

அவர் தனது உறவினரான கடற்படைச் சிப்பாயுடன் தொடர்பைப் பேணியிருந்தமையுடன், கடமை நிமித்தம் தனது அலுவலகத்துக்கும் சமுகமளித்துள்ளார்.

இதனையடுத்து அந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையுடன், ஊழியரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பபட்டுள்ளன. அதன் முடிவுகள் கிடைக்கப் பெற்ற பின்னர் அலுவலகத்தின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 622 பேருக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

134 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

481 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கண்காணிப்பில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கடற்படை இசைக் குழுவில் இருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமையைத் தொடர்ந்து கடற்படைச் சிப்பாய்கள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடற்படை இசைக் குழுவும், விமானப்படை இசைக் குழுவும் இணைந்து அண்மையில் கொழும்பு மாடி வீட்டுத் தொகுதிக்கு அருகில் இசை நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர்.

வீட்டுத் தொகுதியில் இசை நிகழ்ச்சி நடத்திய இசைக்குழுவினர் பிரபல தொலைக்காட்சி ஒன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதையடுத்து தொலைக்காட்சிக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அவர்களின் நோக்கங்களை என்னால் நிறைவேற்ற முடியாது.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீள கூட்டவேண்டுமென எதிர்க்கட்சியில் உள்ள கட்சிகள் மற்றும் அணிகள் பல ஒன்றிணைந்து, ஜனாதிபதிக்கு கூட்டு யோசனையொன்றை நேற்று மாலை கையளித்துள்ளன. இதில், மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்பட்டால் அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும், தமது மாதக் கொடுப்பனவுகள்கூட வேண்டாம் என்றும் உத்தரவாதமளித்துள்ளனர். அத்துடன், எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசைக் கவிழ்க்க மாட்டோம் என்றும்வை தெரிவித்துள்ளன. சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, இரா.சம்பந்தன், பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கூட்டாக இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ -

இப்போதைய நிலைமையில் பலமான புதிய நாடாளுமன்றமே தேவை. எனவே, பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டவே முடியாது. அதற்கான அதிகாரமும் தற்போதைய அரசமைப்பில் இல்லை என்பதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில், தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இந்தத் திகதியில் தேர்தலை நடத்தக்கூடிய சூழல் இல்லையெனில் அதை மேலும் பிற்போட முடியும். அதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலை உரிய காலத்துக்குள் விரைந்து நடத்துவதே எனது நிலைப்பாடு. இதிலிருந்து நான் பின்வாங்கவே மாட்டேன்.

கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி நாட்டைக் குழப்பமான நிலைக்குத் தள்ளவேண்டாம் என்று சில தினங்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்த மகா சங்கத்தினர் கோரியிருந்தனர். அதேவேளை, சிவில் சமூகத்தினரும் இந்தக் கோரிக்கையை என்னிடம் முன்வைத்திருந்தனர். நாட்டின் நலன் கருதிய அவர்களின் கோரிக்கைகளை நான் மனதார வரவேற்றேன்.

எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடுவதற்காகவே பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு வலியுறுத்துகின்றனர். தேர்தல் பயத்திலேயே அவர்கள் இருக்கின்றனர். எனவே, அவர்களின் நோக்கங்களை என்னால் நிறைவேற்ற முடியாது - என்றார்.

## நாவலப்பிட்டி நகரில் கடைகளுக்குப் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை வர்த்தக நிலையங்கள் மூடப்படவுள்ளன.

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் தங்களது விடுமுறை நாள்களில் நாவலப்பிட்டிக்குச் சென்றிருந்தனர்.

தற்போது அந்தக் கடற்படைச் சிப்பாய்கள் இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கடற்படைச் சிப்பாய்களில் ஒருவர் நாலவப்பிட்டியில் தங்கியிருந்த காலப் பகுதியில் நான்கு கடைகளுக்குச் சென்றிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே நாவலப்பிட்டி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் கித்சிறி கருணாதாசா, நவலப்பிட்டி பொலிஸ் மற்றும் வர்த்தகர்கள் சங்க உறுப்பினர்களுடன் நடத்திய பேச்சின் பின்னர் வர்த்தக நடவடிக்கைகளை இவ்வாறு முடக்குவதற்குத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி அனைத்துக் கடைகளையும் மூடி, நாவலப்பிட்டி நகரத்தைக் கிருமி நீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மற்றும் தனியார் பஸ்களும் இப் பகுதிக்கான சேவைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன எனவும் அறியப்படுகிறது.

கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்ட இரண்டு கடற்படைச் சிப்பாய்களும் வெலிசறை கடற்படை முகாமுக்கு தற்போது அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டியின் மூன்று பகுதிகளைச் சேர்ந்த எட்டு குடும்பங்கள் நேற்று முன்தினம் மாலை மிஹிந்தலை, வவுனியா மற்றும் பம்பைமடு ஆகிய இடங்களில் அமையப் பெற்றுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய கல்விக் கொள்கை காண்போம்

நடந்து முடிந்து பெறுபேறு வெளியான கனிஷ்ட பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறு வராத விரக்தியில் மாணவி ஒருத்தி விபரீத முடிவை எடுத்துத் தனது வாழ் வைத் தானே முடித்துக் கொண்டிருக்கின்றார்.

எதிர்பாராத பின்னடைவுப் பெறுபேறு வரும்போது மாணவர் சமூகம் துவண்டுபோவது தவிர்க்க முடியாததுதான். அதுவும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கும் சிறப்புப் பெறுபேறுகள் சறுக்கும்போது மனவிரக்தி ஏற்படுவது புரிந்தும் கொள்ளத்தக்கதே.

ஆனால் ஒரு மாணவி – பதின்மவயதில் இருக்கும் ஓர் இளங்குருத்து – தனது வாழ்வையே இப்படி முடிக்கும் அளவுக்கு மனவிரக்தி ஏற்படுவது என்பது விசனத்துக்குரியது. புரிந்து கொள்ள முடியாதது.

இதற்கு அந்த மாணவியையோ, பெற்றோரையோ அல்லது பாடசாலையையோ, ஆசிரியர்களையோ நோவது தவறானது.

ஒட்டுமொத்த சமூகத்தை – அந்தப் பிரதேசத்தின் கல்விச் சமூகத்தை – நோவதும், கண்டிப்பதும், திருத்துவதும்தான் சரியானதாக இருக்கும்.

பரீட்சையில் சித்தி என்ற மட்டத்துக்கு அப்பால், ஏக்கள், பிக்கள் என்று அடிமட்டம் வைத்து, எண்ணுக் கணக்கில் அளவிடும் முறையற்ற முறைமையே இத்தகைய சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் என நினைக்கின்றோம்.

பெற்றார் ஒருவர் இது குறித்து ஒரு குறிப்பைப் பதிவிட்டிருந்தார்.

'9ஏ' கலாசாரத்தை வெறுப்பவன் நான். இக்கலராசரம் குழந்தைகளை வீண் மன உளைச்சலுக்குள் இட்டுச் செல்லும். இது சமூகத்தின் விஷம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை உண்டு. இதை நான் ஆழமாக நம்புகின்றேன்.

யாழில் இந்தப் பாடசாலையில் இத்தனை பேருக்கு '9ஏ', அந்தக் கல்லூரியில் இத்தனை மாணவருக்கு '9ஏ' என்று செய்தி பரிமாறி, அதற்கு Like போட்டு, Share பண்ணி சமூகத்தைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லாதீர்கள்.

வாழ்வதற்கே கல்வியே தவிர, கல்விக்காக வாழ்க்கை அல்ல. அந்தக் கலாசாரத்தைப் பரப்புவோம்.

– என்று தெரிவித்தார் அந்தப் பெற்றார்.

அது மாத்திரமல்ல, இன்று வசதியான – கல்விப் புலமை மிக்கவராக மதிக்கப்படுகின்றன – ஒரு நிபுணத்துவ சேவையில் இருக்கும் அவர், அந்தக் கடைசிப் பரீட்சையில் தாம் சித்தி பெறுவதற்கு எத்தனை முறை பரீட்சைக்குத் தோற்றினார் என்பதையும், ஒவ்வொரு முறையும் பரீட்சைத் தோல்விகள் தம்மை எப்படி எப்படிப் புதிய மனிதனாகப் புடம் போட்டு, இன்று வாழ்வியலில் ஒரு மெச்சத்தக்க நிலைக்குத் தம்மை தூக்கி விட்டிருக்கின்றன என்பதையும் கூட அந்தப் பதிவில் அவர் விவரித்துள்ளார்.

பரீட்சை முடிவுகளைப் போட்டி மனப்பான்மையுடன் பார்த்துக் கணக்கிட்டு, விமர்சிக்கும் பின்னடைவான கலாசாரம் மிக ஆபத்தானது என்பதைத் தமது வாழ்வியல் அனுபவம் ஊடாக அவர் சாடியிருந்தார்.

மிக உண்மையான – மனதை நெருடிச் சிந்திக்கத் தூண்டுகின்ற – ஓர் அளவீடாக அது இருந்தது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதிலிருந்து – சுமார் எட்டு வயதில் இருந்து – 18 வயது வரை இந்தப் போட்டிப் பரீட்சைச் சூழலுக்குள் பதின்ம வயதுப் பிள்ளைகளை மூழ்கடித்து நாசம் செய்கின்றது நமது சமூக முறைமை.

வெறும் எட்டுச் சுரக்காய் பெறுபேறுகளின் அடிப்படையில் இளம் சமுதாயத்தை இரண்டாகப் பிளந்து ஒதுக்குவதன் மூலம் அறிவுத் தவறு ஒன்றை நமது சமூகம் இழைத்துக் கொண்டிருக்கின்றது என எண்ணுகிறோம்.

ஒட்டுமொத்தமாக, நமது வடக்கு மாகாணம், இலங்கையின் கல்விப் பெறுபேற்றில் மோசமாக வீழ்ச்சியுற்று கல்வியறிவுப் பின்னடைவு என்ற சேற்றுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது.

அதிலிருந்து மீளுவதற்கு முதலில் நாம் பாடசாலைப் பிள்ளைகளை அல்ல, பெற்றோரையே திருத்த வேண்டும், பிள்ளை களின் கல்வியில் அவர்களைக் கரிசனை கொள்ளச் செய்ய வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை விசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வித் துறையில் பழைய நிலைக்கு – தமிழரின் ஒரே அழியாத செல்வம் என்று போற்றப்படும் கல்வியில் மீண்டும் அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு – புதிய ஒரு கல்விக் கொள்கையும் போக்கும் நம் மத்தியில் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

கல்விசார் புலத்தில் அறிவு ஜீவிகள், நிபுணர்கள், புலமையாளர்கள் ஒன்று கூடி இது குறித்துச் சிந்தித்து உரிய திட்டங்களை வகுத்து, வெளிப்படுத்த வேண்டும். அவசரமாகவும், அவசியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டிய பணி இது.

# வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த ஆற்றல் மிகுந்த சுதேச மருத்துவம்

## மாகாண பணிப்பாளர் கருத்துரை



அபாயகரமான வைரஸ் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் சுதேச மருத்துவத்திற்கு உண்டு. அது தொடர்பான மருந்துகளை நாள்தோறும் அருந்துவது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண பணிப்பாளர் மருத்துவர் திருமதி இராஜராஜேஸ்வரி சிறிதர் தெரிவித்தார்.

கிழக்குமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தில் மூன்று மருந்து உற்பத்தி நிலையங்களில் தயார் செய்யப்படும் மருந்துகள் பிரதேச செயலக மட்டத்திலும் வைத்திய சாலைகள் ஊடாகவும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அடங்கலாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 2500 க்கு மேற்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மருந்து பொதிகளை வழங்கி வைத்துள்ளோம். - என அவர் தெரிவித்தார்

உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மருந்துகளை பாவிக்குமாறு கோரிக்கை விடுத்த அவர், கொரோனா நோயைத் தடுப்பதற்கு இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நிலையில் அதனை தடுக்கும் முகமாக ஆயுர்வேத திணைக்களம் பாரிய முன்னெடுப்புகளை முன்னெடுத்து வருவதாகவும் அதில் ஒரு கட்டமாக. உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையிலான மருந்து வகைகளை விநியோகம் செய்து வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

குறிப்பாக உலக நாடுகள் ஆங்கில மருந்துகளுடன் சித்த ஆயுர்வேத மருந்துகளையும் பயன்படுத்தி கோவிட் தொற்றின் காரணமாக இறப்பவர்களின் விகிதத்தினை கட்டுப்படுத்த பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம் என அவர் தெரிவித்தார்

குறிப்பாக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு இவை பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்

இரு வகை குடி நீர்களும் சுவாச சுத்திகரிப்பிற்காக ஆவிபிடித்தலுக்கான ஒரு சூரணம் மற்றும் வீடுகளில் தொற்று நீக்குவதற்கான சாம்பிறாணி ஒன்றினையும் தாம் இலவசமாக வழங்கிவருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் விசுவமடு மக்களால் அழிப்பு





விசுவமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று மாலை 4 மணியளவில் மக்களால் சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

விசுவமடு குளத்தை அண்டிய பகுதியில் சூட்சுமமான முறையில் மறைவிடம் ஒன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாகக் கிடைத்த தகவலை அறிந்த சமூக மட்ட அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அந்த இடத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது இரண்டு பீப்பாய்களில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது .

கிராமஅலுவலர் முன்னிலையில் அனைத்து கசிப்பு பரல்களும் நிலத்தில் ஊற்றி அளிக்கப்பட்டன.

மேற்படி கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் மக்கள் வருவதை கண்டு தப்பியோடியுள்ளனர். இந்த சம்பவத்தின்போது 350 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு மற்றும் அதனை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன மக்களால் அழிக்கப்பட்டுள்ளன.



# ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத்தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிவரக்கோவையினை **kalaikkathironline@gmail.com** எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு: 076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

# கொரோனாவைக் குணப்படுத்த பிளாஸ்மா பயன்படும் என்பதற்கு ஆதார மேதுமில்லை

## அனுமதியின்றிய சிகிச்சை சட்ட விரோதம் என்றும் இந்திய அரசு அறிவிப்பு

கொரோனாவுக்கு பிளாஸ்மா எனப்படும் குணமடைந்த நோயாளியின் குருதியில் இருந்த பிரித்தெடுக்கப்படும் அன்டிபாடியை நோயாளியின் உடலில் செலுத்தும் சிகிச்சை முறையால் பயன் கிட்டியது என்பதற்கான முழுமையான சான்றுகள் எவையும் இல்லை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்தச் சிகிச்சை முறை சோதனை அளவில் மட்டுமே உள்ளது என்றும் அது கூறுகின்றது.

ஒப்புதல் இல்லாமல் பிளாஸ்மா சிகிச்சை அளிப்பது தீங்கு விளைவிக்கும் மற்றும் சட்டவிரோதமான செயல் என்று மத்திய சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

கொரோனா வைரசால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை குணப்படுத்த இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ஐ.சி.எம்.ஆர்.) பிளாஸ்மா சிகிச்சையை பரிந்துரை செய்தது. டெல்லி, கேரளா, குஜராத் மற்றும் பஞ்சாப் போன்ற பல மாநிலங்கள் கொரோனா நோயாளிகளுக்கு பிளாஸ்மா சிகிச்சையைப் பயன்படுத்த தொடங்கியுள்ளன.

இதன்மூலம் டெல்லியில் 4 நோயாளிகளின் உடல்நிலை தேறி வருகின்றனர் எனக் கூறப்பட்டது. தமிழகத்திலும் இந்தச் சிகிச்சை முறையை மேற்கொள்வதற்கான அனுமதி மத்தியால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிளாஸ்மா சிகிச்சை முறை தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை இணைச் செயலாளர் லாவ் அகர்வால் கூறியதாவது:–

பிளாஸ்மா சிகிச்சை பரிசோதனை செய்யப்படுகிறது, இருப்பினும் இது ஒரு சிகிச்சையாக பயன்படுத்தப்படலாம் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. இதன் செயல்திறனைப் ஆய்வு செய்ய ஐ.சி.எம்.ஆர் தொடங்கிய தேசிய அளவிலான சோதனைகளைநடத்துகிறது.

ஐ.சி.எம்.ஆர். தனது ஆய்வை முடிக்கும் வரை ஒரு வலுவான அறிவியல் சான்று கிடைக்கும் வரை, பிளாஸ்மா சிகிச்சை ஆராய்ச்சி அல்லது சோதனை நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சரியான வழிகாட்டுதலின் கீழ் பிளாஸ்மா சிகிச்சையை சரியான முறையில் பயன்படுத்தாவிட்டால், அது உயிருக்கு ஆபத்தான சிக்கல்களையும் ஏற்படுத்தக்கூடும்.

பிளாஸ்மா சிகிச்சை என்பது நிரூபிக்கப்பட்ட சிகிச்சை அல்ல. இது இன்னும் சோதனை நிலையில் உள்ளது, இப்போது ஐ.சி.எம்.ஆர். கூட இந்த சிகிச்சையைப் பற்றிய கூடுதல் புரிதலை அடையாளம் காணவும் செய்யவும் ஒரு பரிசோதனையாகச் செய்து வருகிறது. இது அங்கீகரிக்கப்படும் வரை யாரும் அதைப் பயன்படுத்தக்கூடாது, இது நோயாளிக்கும் தீங்கு விளைவிக்கும் மேலும் சட்டவிரோதமாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆயிரத்தைக் கடந்தது இந்தியாவில் சாவுகள்

## கொரோனாவின் தாக்கம் தொடர்ந்தும் அதிகரிப்பு



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை ஆயிரத்து 7 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் தொற்று எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது. உயிரிழப்பு எண்ணிக்கையும் சீராக அதிகரித்தே வருகின்றது.

ஊரடங்கு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் தொற்று அதிகரிக்கும் வீதம் வேகமாக வீழ்ச்சி கண்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றபோதும் மே மாதத்திலேயே தொற்று இந்தியாவில் உச்சமடையும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்தை கடந்துள்ளது. மொத்தம் 31 ஆயிரத்து 332 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மட்டும் ஆயிரத்து 897 பேருக்கு நோய்த்தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

73 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 7 ஆக உயர்ந்துள்ளது. 7 ஆயிரத்து 696 பேர் கொரோனா பாதிப் பில் இருந்து மீண்டுள்ளனர்.

நாட்டிலேயே அதிகபட்சமாக மகாராஷ்டிர மாநிலத்தில் 9 ஆயிரத்து 318 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 400 பேர் உயிரிழந்துள்ளனர். குஜராத்தில் 3 ஆயிரத்து 744 பேருக்குத் நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 181 பேர் உயிரிழந்துள்ளனர். தலைநகர் டெல்லியில் 3 ஆயிரத்து 314 பேருக்குத் நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

# தாயம் ஏற்படுத்திய காயம்!

இணையம் ஊடான தாயம் விளையாட்டில் மனைவி தன்னை தோற்கடித்தமையால் ஆத்திரமடைந்த கணவன் மனைவியைச் சரமாரியாக அடித்து உதைத்த சம்பவம் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆமதாபாத் மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண் ஊரடங்கை வீட்டில் சந்தோஷமாக கழிப்பதற்காக லுடோ (தாயம்) இணைய விளையாட்டை தனது அலைபேசியில் விளையாடியுள்ளார். பின்னர் தனது கணவரையும் அந்த விளையாட்டில் இணையச் செய்துள்ளார்.

இதையடுத்து இருவரும் தங்களது அலைபேசிகள் இதில் அந்த பெண் தொடர்ந்து வெற்றி வாகை சூடினார். கணவனால் இதனை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. எப்படியாவது மனைவியை தோற்கடிக்க வேண்டும் என்று முயன்ற அவருக்கு தொடர் தோல்வியே பரிசாக கிடைத்தது.

இதனால் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்ற அந்த கணவன், மனைவியை எதிரியாக பாவித்து சரமாரியாக அடித்து உதைத்தார். இதில் முதுகெலும்பில் காயம் ஏற்பட்டதை தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற அந்த பெண், பின்னர் இது குறித்து மாநில ஹெல்ப்லைன் எண்ணை தொடர்பு கொண்டு நடந்த சம்பவத்தை விளக்கி உள்ளார்

இதையடுத்து அந்தத் தம்பதிக்கு ஆலோசனை வழங்கிவிட்டு, ஏதேனும் பாதுகாப்பு தேவையா? என அந்த பெண்ணிடம் கேட்டதுக்கு அவர் தேவை இல்லை என மறுத்ததுடன், கணவர் மீது எந்த புகாரும் அளிக்காமல் தனது தாய் வீட்டில் சில நாள்கள் தஞ்சம் அடையச் சென்றுவிட்டார்.

# 50 இந்தியத் தொழிலதிபர்களினது ரூ. 68 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி

விஜய் மல்லையா, நிரவ் மோடி, மெகுல் சோக்சி உள்ளிட்ட 50 இந்தியத் தொழில் அதிபர்கள் திருப்பி செலுத்தாத இந்திய மதிப்பில் ரூ. 68 ஆயிரம் கோடி வங்கி கடன்களைத் தள்ளுபடி செய்வதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

பெங்களூருவைச் சேர்ந்த தொழில் அதிபர் விஜய் மல்லையா பல்வேறு வங்கிகளில் பல்லாயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கிவிட்டு திருப்பி செலுத்தாமல் பிரிட்டனுக்குச் சென்றுவிட்டார். இதேபோல் வைர வியாபாரி நிரவ் மோடி, அவரது உறவினர் மெகுல் சோக்சி ஆகியோரும் பல வங்கிகளில் பணம் கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாமல் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டனர்.

இது தவிர மேலும் பல தொழில் அதிபர்களும் பல்லாயிரம் கோடி ரூபாய் வங்கி கடனை திருப்பி செலுத்தாமல் உள்ளனர்.

இந்த வங்கி கடன் விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ.யும், அமலாக்கப்பிரிவும் தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன. வெளிநாடுகளில் இருக்கும் விஜய் மல்லையா உள்ளிட்ட தொழில் அதிபர்களை நாடு கடத்தி இந்தியாவுக்கு கொண்டு வரும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டு உள்ளது. விஜய் மல்லையா லண்டனில் இருந்தபடி, தனக்கு எதிரான வழக்குகளை சந்தித்து வருகிறார்.

கடன்கள் தள்ளுபடி குறித்து ராகுல் காந்தி தனது டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:–

நிரவ் மோடி, மெகுல் சோக்சி, விஜய் மல்லையா உள்ளிட்ட வங்கி மோசடியாளர்கள் 50 பேர் வாங்கிய ரூ. 68 ஆயிரத்து 607 கோடி கடனை மத்திய அரசு ரத்து செய்து இருப்பதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ரிசர்வ் வங்கி அளித்த பதில் மூலம் தெரியவந்து இருக்கிறது.

வங்கியில் கடன் வாங்கிவிட்டு திருப்பி செலுத்தாத 50 பேரின் பெயர்களை வெளியிடுமாறு முன்பு நான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது, நிதி மந்திரி அதற்கு பதில் அளிக்க மறுத்துவிட்டார். ஆனால் இப்போது நிரவ் மோடி, மெகுல் சோக்சி உள்ளிட்ட பாரதீய ஜனதாவின் நண்பர்கள் பெயர்களை ரிசர்வ் வங்கி வெளியிட்டு இருக்கிறது. இந்த உண்மையை நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்காமல் மறைத்தது ஏன்?– இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மத்திய அரசு ரூ. 6 லட்சத்து 66 ஆயிரம் கோடி கடன்களை ரத்து செய்து இருப்பதாக காங்கிரஸ் கட்சி கூறி உள்ளது.

# செம்டெம்பருக்குள் கொரோனாவுக்கு தடுப்பூசி வந்துவிடும்: இந்திய நிறுவனம்

செப்டம்பர் மாதத்தில் கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்று இந்திய மருந்து நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா நோய்க்கு இதுவரை தடுப்பூசியோ, மருந்துகளோ கண்டுபிடிக்கப்படவில்லை.

தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் அறிவியல் தொழில்நுட்பத்தில் முன்னேறிய பல நாடுகள் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவிலும் இதுபோன்ற ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் சீரம் இன்ஸ்டிடியூட் ஏவ் இந்தியா என்ற மருந்து நிறுவன அதிபர் பூனாவாலா தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தமது நிறுவனம் செப்டெம்பர் மாதத்தில் தடுப்பூசியை அறிமுகப்படுத்தி விடும் என்று தெரிவித்தார்.

அவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:–

கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்க 2 ஆண்டுகள் அல்லது குறைந்தபட்சம் 18 மாதங்களாவது ஆகும் என்று உலகின் பல விஞ்ஞானிகளும் தெரிவித்து வந்தனர். நாங்களும் அப்படித்தான் கூறி வந்தோம். ஆனால் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக குழுவுடன் நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்போது நடைபெற்று வரும் ஆராய்ச்சியின் காரணமாக செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் கொரோனாவுக்கு தடுப்பூசியை கண்டுபிடித்து விட முடியும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஏனெனில் இதற்கு முன்பு உலகை அச்சுறுத்திய எபோலா நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தது இதே குழுவினர்தான்.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தற்போது, ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 23ஆம் திகதி முதல் இந்த சோதனை நடந்து வருகிறது. எங்கள் சோதனை வெற்றிகரமான முடிவைத் தருமானால் அந்த மருந்தை இந்தியாவுக்கும், உலக நாடுகளுக்கும் உடனடியாக கொடுத்து விடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இவர்கள் கண்டுபிடிக்க இருக்கும் கொரோனா தடுப்பூசியின் விலை என்னவாக இருக்கும்? என்று கேட்டபோது குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் இருக்கும் என்று அவர் பதிலளித்தார்.

# எரிபொருள் லொறியில் வெடித்தது குண்டு சிரியச் சந்தையில் 40 பேர் உடல் சிதறிச் சாவு





சிரியாவில் எரிபொருள் கொண்டுவந்த லொறியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து 40 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப்போரின் போது குர்திஷ் ஆயுததாரிகள் அந்த நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள பல்வேறு மாகாணங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தன்னிச்சையாக ஆட்சி நடத்தி வந்தனர்.

இந்தப் போராளிகள் குழுவை ஒழிக்க ரஷ்யா உதவியுடன்சிரியாபலஆண்டுகளாகச்சண்டையிட்டது.

இதற்கிடையில், சிரியாவில் செயல்பட்டு வந்த குர்திஷ் ஆயுததாரிகளைப் பயங்கரவாதிகள் என கூறிவந்த துருக்கி அவர்கள் மீது தரைவழி மற்றும் வான்வெளி தாக்குதல்களையும் நடத்தி வருகிறது.

அதேபோல், குர்திஷ் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் அலெப்போ மாகாணத்தையும் துருக்கி கடந்த 2018ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

மேலும், அலெப்போவில் உள்ள குர்திஷ் ஆயுததாரிகளை அழிக்கும் நடவடிக்கையில் துருக்கி படையினரும், அதன் ஆதரவு கிளர்ச்சியாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், குர்திஷ் போராளிகளுக்கும், துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அவ்வப்போது சண்டை நடப்பது வழமை.

இந்த நிலையில், துருக்கியின் கட்டுப்பாட்டில் உள்ள சிரியாவின் அலொப்போ மாகாணம் அஃப்ரின் மாவட்டத்தில் உள்ள ஒரு சந்தை பகுதியில் இன்று வெடிகுண்டுகள்நிரப்பப்பட்டஎரிபொருள் கொண்டுவந்த லொறி ஒன்று நிறுத்தபட்டிருந்தது.

மக்கள் கூட்டம் நிறைந்த சந்தை பகுதியில் வெடிகுண்டுகளுடன் நிறுத்தப்பட்டிருந்த அந்த லொறி திடீரென வெடித்துச் சிதறியது.

இந்தக் குண்டுவெடிப்புத் தாக்குதலில் துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்கள், பொதுமக்கள் உள்பட 40 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

சிரியாவின் அஃப்ரின் மாவட்டத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு குர்திஷ் ஆயுததாரிகள்தான் காரணம் என துருக்கி அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

# அமெரிக்காவில் நேற்று மீண்டும் எகிறியது உயிரிழப்பு எண்ணிக்கை

## 2 ஆயிரத்து 470 பேர் சாவு

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று ஒரே நாளில் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்துள்ளனர். இரு நாள்களாகக் குறைந்து வந்த பலி எண்ணிக்கை மீண்டும் நேற்றுத் திடீரென அதிகரித்து சராசரி உயிரிழப்புக்கும் மேலாக எகிறியது.

சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடு அமெரிக்காவே அங்கு 10 லட்சத்து 36 ஆயிரம் பேர் இன்று மதியம் வரைக்கும் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். உலக அளவில் வைரஸ் பரவியவர்கள் மற்றும் உயிரிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா தொடர்ந்து பல வாரங்களாக மற்றைய நாடுகள் நெருங்கக்கூட முடியாதபடி முதலிடத்தில்தான் உள்ளது.

அங்கு சராசரியாக நாளொன்றுக்கு இரண் டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து வந்தனர். எனினும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் இந்த எண்ணிக்கை சரா சரிக்கும் கீழாகச் சரிந்தது. இந்த இரு நாட்களிலும் ஆயிரத்துக்குச் சற்று அதிகமானவர்களே உயிரிழந்தனர்.

ஆனால், நேற்ற மீண்டும் உயிரிழப்பு 2 ஆயிரத்தைத் தாண்டி எகிறியது. நேற்று ஒரே நாளில் மட்டும் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 59 ஆயிரத்து 266 ஆக உயர்ந்துள்ளது.

நியூயோர்க் மாநிலத்திலேயே அரைவாசி உயிரிழப்புக்களும் மூன்றிலொரு பகுதி தொற்றும் ஏற்பட்டுள்ளது.

# 31லட்சம் பேருக்கு தொற்று மூவரில் ஒருவர் அமெரிக்கர்

உலகம் முழுவதும்கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 31 லட்சத்தைத் தாண்டியது. இதில் மூன்றில்லொருவர் அமெரிக்கர். அந்த நாட்டில் 10 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று மதியம் வரையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 31லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமானதாக இருந்தது. இவர்களில் 9 லட்சத்து 56 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். 19 லட்சத்து 65 ஆயிரம் பேர் அதிகமானவர்கள் தொடர்ந்தும் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

2 லட்சது 18 ஆயிரம் பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்திருக்கிறார்கள். இன்னும் 57ஆயிரம் பேரின் நிலை ஆபத்தானதாக இருக்கின்றது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் அமெரிக்காவைச் சேர்ந்தவராக இருக்கின்றார். அங்கு 10 லட்சத்து 36 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது. ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் குணமடைந்தனர்.

59 ஆயிரத்து 266பேர் இதுவரை உயிரிழந்திருக்கின்றனர். மேலும் 15 ஆயிரத்து 298 பேரின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று மட்டும் அமெரிக்காவில் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்தனர். 25 ஆயிரத்து 409பேருக்குப் புதிதாக கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.



அமெரிக்காவை அடுத்து ஸ்பெயினில் 2 லட்சத்து 32 ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. 23 ஆயிரத்து 822 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இத்தாலியில் 2 லட்சத்து ஓராயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 27 ஆயிரத்து 359 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பிரான்ஸில் ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 23 ஆயிரத்து 660 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பிரிட் டனில் ஒரு லட்சத்து 61 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட் டுள்ளது. 21ஆயிரத்து 678 பேர் உயிரிழந் திருக்கிறார்கள். ஜேர்மனியில் ஒரு லட்சத்து 59 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 6 ஆயிரத்து 314 பேர் உயிரிழந் திருக்கிறார்கள்.

# கொரோனா பரவா நாடாகியது ஏமன்

கொரோனா உறுதி செய்யப்பட்ட ஒரேயொரு நபரும் சிகிச்சைக்கு பின் குணமடைந்ததையடுத்து கொரோனா இல்லாத நாடாக ஏமன் மாறியுள்ளது.

உள்நாட்டுச்சண்டையால் ஏற்கனவே மோசமானஉட்கட்டமைப்புச்சீரழிவுகளை எதிர்கொண்டுள்ள ஏமனில் கொரோனா மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடும் என்று அஞ்சப்பட்டது.

அந்நாட்டில் ஹட்ராமொண்ட் மாகாணம் அஷ் ஹூர் நகரை சேர்ந்த 60 வயது நிரம்பிய அரசு அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் கடந்த 10ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது. அவரது குடும்பத்தினரை கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்த மருத்துவத்துறையினர் முற்பட்டனர். ஆனால், அவர்கள் யாரும் வைரஸ் பரிசோதனை செய்ய முன்வரவில்லை. இதனால், அவர்கள் அனைவரும் 21 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

மேலும், வைரஸ் உறுதி செய்யப்பட்டவருடன் தொடர்பில் இருந்த 120 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அவர்கள் யாருக்கும் வைரஸ் தொற்று பரவவில்லை. இதனால் ஒட்டுமொத்த ஏமனிலும் அந்த ஓர் அரசு அதிகாரிக்கு மட்டுமே கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், கொரோனா பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அந்த அரசு அதிகாரி நேற்றுக் குணமடைந்தார். இதையடுத்து அவர் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார்.

மேலும், வைரசில் இருந்து குணமான நபரின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டு 21 நாள்களும் முடிவடைந்தது.

இதனால் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லாத நாடாக ஏமன் மாறியுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைரஸ் பாதிப்பில் இருந்து ஏமன் மீண்டு வந்துவிட்டதாக அந்நாடு அதிகாரிகள் தெரிவித்தபோதும் 3 கோடி மக்கள் தொகையை கொண்ட நாட்டில் ஒட்டுமொத்தமாக 120 பேருக்கு மட்டுமே கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளதால் இந்த தகவலின் உறுதித்தன்மை குறித்தும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

# மாமனிதர் சிவராமின் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி வவுனியாவில்

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 28 ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமாகிய மாமனிதர் தர்மரத்தினம் சிவராமின் (தராகியின்) அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி வவுனியாவில் இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் வவுனியாவில் ஆயிரத்து நூற்று ஐம்பது நாள்கள் கடந்தும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை, நடத்தி வருகின்றனர்.

ஏ9 வீதிக்கு அருகே அமையப்பெற்றுள்ள தமது போராட்டப் பந்தலில் இன்று புதன்கிழமை 1167 ஆவது போராட்ட நாளில், மாமனிதர் தராகி அவர்களின் உருவப்படத்தை காட்சிப்படுத்தி மெழுகுவர்த்திகள் ஏற்றி மலர் தூவி தமிழர் தாயக சங்கத்தினர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தமிழர் பிரச்சினையை சர்வதேச அரசியல் மயப்படுத்தியவர்களில் முதன்மையானவர் ஊடகவியலாளர் தராகி. ஆனால் அவரது படுகொலைக்கு நீதியைப் பெறுவதற்கு கூட, சர்வதேச விசாரணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கோரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் மூளையாகத் தொழிற்பட்டவர் அரசியல் ஆய்வாளர் தராகி. ஆனால் இன்று மாமனிதர் தராகியை படுகொலை செய்தவர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுத்து கொலைகாரர்களின் கூடாரமாக மாறியுள்ளது தமிழ் தேசியக் கூட்டமைப்பு – என்றும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை தமிழர் தாயக சங்கத்தினர் காட்சிப்படுத்தியிருந்தனர்.









# கொரோனா விவகாரம் தொடர்பான தகவல்களுக்கு தனி இணையத்தளம்

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த எனும் https://covid19.gov.lk/ புதிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் திங்கட்கிழமை இடம் பெற்றது.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் ICTA மூலம் இந்த இணையத்தளம் செயற்படுத்தப்படுகின்றது.

இந்த இணையதளத்தின் மூலம் ஜனாதிபதி செயலகம், சுகாதார மேம்பாட்டு அலுவலகம், கொவிட் 19 தொற்று பரவுவதை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம், அரசாங்க தகவல் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஆகிய நிறுவனங்களின் மூலம் பெறப்படும் தகவல்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

கொவிட் 19 பரவுவதை தடுக்கும் அனைத்துத் தகவல்கள் மற்றும் செயற்பாடுகள், கண்டுபிடிப்புகள் தொடர்பான தகவல்களின் கேந்திர நிலையமாக இந்த இணையதளம் செயற்படுவதுடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சமீபத்திய புதுப்பிப்புகளுடன் துல்லியமான தகவல்களை தடையின்றி பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் சுகாதாரத்திற்கான தகவல்கள் உள்ளடக்கிய ஆவணங்களை மாத்திரம் வரையறுக்காது பொருளாதாரம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சுற்றுலா, போக்குவரத்து அத்தியாவசியப் பொருள்களை விநியோகித்தல், சமூக சேம நலம், சட்டம் மற்றும் சமாதானம், பாதுகாப்பு போன்ற பல தகவல்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 31 நிலையங்களில் 3,292 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தலில்!



இராணுவத்தின் கீழுள்ள 31 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3 ஆயிரத்து 292 பேர் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

## 4, 526 பேர் வீடு திரும்பினர்

அவர் மேலும் கூறுகையில் –

இந்தியாவின் பெங்களூரிலிருந்து 164 பேர் நேற்று விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர். இவர்களில் இராணுவத்தினர், அரச ஊழியர்கள் ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் இராணுவத்தின் கட்டாயத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் கீழுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 4 ஆயிரத்து 526 பேர் வீடு திரும்பியுள்ளனர். கொரோனா தொற்றிய கடற்படையினர் குடும்பத்தினர் மற்றும் நெருக்கமாகப் பழகியவர்கள் ஆகியோரும் கட்டாயத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இராணுவத்தின் கீழுள்ள 31 நிலையங்களில் 3 ஆயிரத்து 292 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் – என குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

சித்திரப்போட்டி

தினம் ஒரு தலைப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

நாளை (30/04/2020) தலைப்பு
பழக்கூடை

சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# சுகாதாரப் பாதுகாப்பு நிலைவரம்; சகல படை முகாம்களிலும் ஆய்வு

## விசேட ஜனாதிபதி செயலணி தீர்மானம்

நாட்டிலுள்ள அனைத்துல் படை முகாம்களையும் ஆய்வு செய்து முகாம்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கு விசேட ஜனாதிபதி செயலணி தீர்மானித்துள்ளது.

விசேட ஜனாதிபதி செயலணியின் பிரதானி மேல் மாகாண ஆளுனர் மார்ஷல் ஒவ் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது முகாம்களில் உள்ள சுகாதார நடை முறைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகள், சரியாக செயற்படுத்தப்படுகின்றனவா என்று ஆராயப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிறு முகாம்களின் பிரதானிகளை அழைத்து, சுகாதார நடைமுறைகள் குறித்து தெளிவுப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வினாத்தாள் உருவாக்கல்: இணைய வழி செயலமர்வு

ஆசிரியர்களுக்கு றூலிலிஆயிளய்லிஷதுவி மூலமாக வினாத்தாள்களை உருவாக்குதல் தொடர்பிலான இணைய வழி செயலமர்வை நாளை வியாழன் இரவு 8.00 மணிக்கு இணையத்தில் சிறகுகள் அமையம் மற்றும் சுவடி நிறுவகம் இணைந்து நடாத்தவுள்ளன. இந்தச் செயலமர்வில் தன்னார்வலர்களாக வினாத்தாள்களை உருவாக்க விரும்பும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலைக்கல்வியை நிறைவுசெய்தோரும் கலந்துகொள்ள முடியும்.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ள விரும்புவோம் edu.sirakukal.online எனும் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

மேலதிகவிவரங்களுக்கு 0764658482 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ளவும்.

# கொரோனா தடுப்பு நிதியத்துக்கு ஐம்பது லட்சம் நிதி அன்பளிப்பு

லங்கா மின்சார தனியார் நிறுவனம் அன்பளிப்பு செய்த ஐம்பது லட்சம் ரூபா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் செயலகத்தின் பணிப்பாளர்நாயகம்ஆர்.குணரத்னதனதுசம்பளத்தை சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தார்.

நிறுவன, தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட்19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 87கோடி10 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட் 19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவருக்கும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்புகளை செய்ய முடியும்.

சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணயசட்டதிட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடியும்.

0112354479/0112354354 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) கே.பீ. எகொடவெலேவினை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும்.

# படையினரும் உறவினர்களுமே நேற்று கொரோனாவுக்கு இலக்கு



இலங்கையில் நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் உறுதிப்படுத்தப்பட்ட 31பேரும் கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நேற்று கண்டறியப்பட்டவர்களில் 21 பேர் கடற்படையினராவர். 6 பேர் கடற்படையினரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள். ஏனைய 4 பேரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட கடற்படையினர் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்தவர்களாவார்.

ஏனைய தொற்று நோயாளிகள் மெதிரிகிரிய, அரநாயக்க, பொல்பிதிகம, அகலவத்தை, மற்றும் ஹபரண பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, கொரோனா தொற்று நோயாளிகளுக்கு நாட்டில் உள்ள 7 வைத்தியசலைகளில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலை, வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலை, முல்லேரியா ஆதார வைத்தியசாலை, இரணவில வைத்தியசாலை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, மினுவாங்கொடை ஆதார வைத்தியசாலை மற்றும் வெலிசறை கடற்படை வைத்தியசாலை ஆகியவற்றில் இந்தச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன – என்றார்.

# மட்டக்களப்பில் சிவராம் நினைவேந்தல்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் நிலாந்தன் மற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முதலில் சிவராம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தி, அஞ்சலி விளக்கேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பு நிலைமை கருதி குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களுடன் மிகவும் எளிமையான முறையில் இந்நினைவேந்தல் நிகழ்வு மேறகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






















காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000




**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

## அனைத்து தபால் நிலையங்களும் அடுத்த திங்கள் முதல் இயங்கும்

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி முதல் வழமைபோல் திறக்கப்படும் என தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மாதாந்திர கொடுப்பனவுகள், முதியோர் கொடுப்பனவுகள், விவசாய ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியங்கள் உட்பட 2020 மே மாதத்திற்கான அனைத்து கொடுப்பனவுகளும் தபால் நிலையங்களில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றிலிருந்து பொதுமக்களுக்கு நீர் கட்டணம், மின்சார கட்டணம் செலுத்துதல், உள்ளூர் மின்னணு நாணய பரிமாற்றங்கள் மற்றும் கடிதங்கள் மற்றும் தபால்களை உள்ளூர் தபால் நிலையங்களில் ஒப்படைக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சேவைகளைப் பெறுவதற்கு பொதுமக்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

## தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்து 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

### உன்னிச்சைப் பகுதியில் சம்பவம்

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்சேனை உன்னிச்சைப் பகுதியைச் சேர்ந்த 2 வயதுடைய இந்திரகுமார் ருஸ்மிதன் என்ற ஆண் குழந்தை, நீர் நிரப்பப்பட்ட வாளியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம், நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

உயிரிழந்து குழந்தையும் அதே வயதுடைய அயல்வீட்டுக் குழந்தையும் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது, முற்றத்தில் நீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்த வாளியில் மேற்படி குழந்தை விழுந்துள்ளது.

குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாய் ஓடிவந்து பார்த்தபோது, குழந்தை நீருக்குள் கிடப்பதைக் கண்டெடுத்து, மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, குழந்தை உயிரிழந்துவிட்டதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தின் பணிப்புக்கமைய, திடீர் மரண விசாரணை அதிகாரி சந்திரவதனா நிஸ்ரமானந்தராசா, சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணையை கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிள்ளைகளின் கல்வி தொடர்பில் கரிசனையை முதலில் பெற்றோர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்

## பின்னடைவுப் பெறுபேறுகளிலிருந்து வடக்கு மாகாணத்தை மேம்படுத்த அதுவே வழி என்கிறார் வாழ்நாள் பேராசிரியர்



வடக்கு மாகாணத்தில் பரீட்சை பெறுபேற்றினை அதிகரிக்க வேண்டுமேயானால் வடக்கு மாகாண கல்வித் திணைக்களமானது பெற்றோர் மத்தியில் பிள்ளைகளின் கல்வி தொடர்பில் கரிசனையை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே வடக்கு மாகாணத்தில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெளியாகிய க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றின்படி வடக்கு மாகாணமானது கடைசி மாகாணமாக திகழ்கின்றது. இந்த விடயம் மாற்றப்பட வேண்டுமேயானால் வடக்கில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய கரிசனை செலுத்த வேண்டும். அதன் மூலமே இது சாத்தியப்படும். ஏனெனில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் வளம் உட்பட அனைத்து வளங்களும் மிகச்சிறப்பாக காணப்படுகின்றன.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கு மாகாணத்தில் 13 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமை காணப்படுகின்றது. அதே போல் அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களினால் அனைத்து பாடசாலைகளுக்கும் வளங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றம் ஏற்படாது இருப்பதற்குக் காரணம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடிய கரிசனை செலுத்தாமையேயாகும்.

கல்விப் பெறுபேற்றில் இலங்கையின் 99 ஆவது – கடைசி – வலயமாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தீவக வலயம் காணப்படுகின்றது.

அத்தோடு இலங்கையின் 16ஆவது வலயமாக மன்னார் வலயம் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையை மாற்றியமைக்க வேண்டுமேயானால் மாகாண கல்வித் திணைக்களமானது பெற்றோர்கள் மத்தியில் பிள்ளைகளின் கல்வி தொடர்பான கரிசனையை ஏற்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும். பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்க முடியும். – என தெரிவித்தார்.

# சிகையலங்காரப் பணியாளருக்கும் நிவாரணம் கோருகின்றார் செல்வம்



தொடர்ச்சியாக சிகையலங்கார நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் சிகையலங்கார தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கும் உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாட்டின் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

தற்போது காவல்துறை ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஸ்தம்பிதம் அடைந்த நடவடிக்கைகள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் சிகையலங்கார நிலையங்கள் அனைத்தும் தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளன. இதனால் சிகையலங்கார தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களும் தொடர்ச்சியாக பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளனர். எனவே சிகையலங்கார நிலையங்களை சுகாதார முறைப்படி திறந்து அவர்களின் தொழிலைப் பாதுகாப்புடன் மேற்கொள்ள அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிகையலங்கார நிலையங்கள் தொடர்ச்சியாக மூடப்பட வேண்டிய சூழ் நிலை ஏற்படும் பட்சத்தில் சிகையலங்கார தொழிலாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவையும், உரிய நிவாரணத்தையும் வழங்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு – கிழக்கில் பல நூற்றுக்கணக்கான சிகையலங்காரத் தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கு தொழில் இன்மையால் அவர்களின் குடும்பத்தவர்களும் பல்வேறு வகையில் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே அரசு அவர்கள் மீதும் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களுக்காக கிழக்கில் 11 பாடசாலைகளை இராணுவம் ஏற்பு!

கிழக்கு மாகாணத்தில் 11 பாடசாலைகள், கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களாகின்றன.

இதற்காகக் கல்முனைப் பிராந்தியத்தில் 04 பாடசாலைகளும், திருமலைப் பிராந்தியத்தில் 04 பாடசாலைகளும், அம்பாறைப் பிராந்தியத்தில் 03 பாடசாலைகளும் இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இத்தகவலை, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் ஊர்ஜிதம் செய்தார்.

கல்முனைப் பிராந்தியத்தில், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயம், அக்கரைப்பற்று சென் ஜோன்ஸ் வித்தியாலயம், பாணமை தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய 04 பாடசாலைகள் தனிமைப்படுத்தல் முகாம்களாகின்றன.

திருகோணமலைப் பிராந்தியத்தில், மூதூர் இலங்கைத்துறை முகத்துவாரம் பாடசாலை, ரொட்டவேவ முஸ்லிம் வித்தியாலயம், மொறவேவ சிங்கள மகா வித்தியாலயம், புல்மோட்டை கனிஜாவலி சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் முகாம்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அம்பாறைப் பிராந்தியத்தில், பொத்துவில் பாணமை மகா வித்தியாலயம், உகண ஹிமிதுறவ வித்தியாலயம், உகண கலகிட்டியாகொட மகா வித்தியாலயம் ஆகிய 03 பாடசாலைகளே தனிமைப்படுத்தல் முகாம்களாகின்றன.

மேற்படி 11 பாடசாலைகளையும் இராணுவத்தினர் பொறுப்பேற்று, தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை தனிமைப்படுத்திக் கண்காணிப்பதற்காக இப்பாடசாலைகள் பயன்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பும் கிளம்பி வருகிறது. வடக்கில், முல்லைத்தீவு முத்தையன் கட்டுப்பகுதியிலும் நேற்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டும் இராணுவம் அங்குள்ள பாடசாலையைக் கையேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2020 இல் வெளியிடப்பெற்றது.